செய்தி வெளியீடு எண்: 510 நாள்: 31.08.2012

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் இன்று 31.08.2012 காலை 10 மணியளவில் சென்னை மண்டலம் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழக , நந்தனம் பொது விநியோகத் திட்ட கிடங்கு, அமுதம் நியாயவிலை அங்காடிகள் எண்.MA.004 மற்றும் MA.003, அமுதம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விலையில்லா அரிசி வழங்கும் உன்னத திட்டத்தின் கீழ் நியாயவிலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படும் அரிசியின் மூட்டைகளிலிருந்து சோதனை மாதிரி எடுத்து தரத்தினை உறுதிசெய்தார். சுமார் 4,000 மெ.டன் கொண்ட இந்த கிடங்குகள் வளாகத்தில் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருள்கள்அனைத்தும் பூச்சித்தாக்கம் ஏதுமின்றி முறையாக பராமரிக்கப்பட்டு தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தினார். மேலும் நிஜாமாபாத் (ஆந்திரா) இந்திய உணவுகழக கிடங்குகளிலிருந்து பெறப்பட்டு சேமிப்பில் வைக்கப்பட்டிருந்த அரிசியின் தரத்தினையும் மாதிரி எடுத்து பரிசோதனை செய்தார். இந்திய உணவுக்கழக கிடங்குகளில் உள்ள அரிசியின் தரம், தரக்கட்டுப்பாடு அலுவலர்களின் தீவிரமான பரிசோதனைக்குப் பின்னரே லாரிகள் மூலம் இயக்கம் செய்யப்படவேண்டுமென்ற ஏற்கனவே நடைமுறையில் உள்ளஅறிவுரைகள் முனைப்புடன் செயல்படுத்தப்படவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார். இதனால் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் தரமான அரிசி சரியான எடையில் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் தரமான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றிட வேண்டி தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 2012–2013 நிதியாண்டிற்கு ரூ. 4900 கோடி ரூபாய் உணவு மானியமாக ஒதுக்கி தந்துள்ளார்கள். குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவையான பருப்பு வகைகள், பாமாயில் முதலியன போதுமான அளவு கையிருப்பு உள்ளது. ஆகஸ்டு மாதத்தில் 88% துவரம் பருப்பும், 87% உளுத்தம் பருப்பும், 92% பாமாயிலும் சிறப்பு பொதுவிநியோகதிட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்திற்கு தேவையான சுமார் 9 இலட்சம் மெ.டன் அரிசி கையிருப்பில் உள்ளது.

கிடங்கிலிருந்து அங்காடிகளுக்கு இயக்கம் செய்யப்படும் அத்தியாவசிய பொருள்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துணை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே சத்துணவு மையம், அங்காடிவாரியாக தனித்தனி வழங்கு சீட்டு தயார் செய்து நகர்வு செய்யப்படவேண்டும்.

நுகர்வோர்களின் குறைகளை களைய புகார் பிரிவு ஒன்று குடிமைப்பொருள் வழங்கல் பிரிவு ஆணையாளர் சென்னை அலுவலகத்தில் கீழ்க்கண்ட செல்லிட தொலைபேசி எண்களுடன் செயல்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 9445464748 | 044–28592828 |
| 2 | 7299998002 | 7299008002 |
| 3 | 8680018002 | 8680028003 |
| 4 | 7200018001 | 7200048002 |

குடும்ப அட்டைகளுக்கு, எல்லா வேலை நாட்களிலும், அனைத்து பொருட்களும் ஒரே சமயத்தில் கிடைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. பொருள்கள் இருப்பு விபரம், புகார் தெரிவிக்கவேண்டிய அலுவலர்களின் தொலைபேசி எண்கள் முதலானவை தகவல் பலகையில் ஒவ்வொரு அங்காடியிலும் தெளிவாக எழுதி பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் பெறுவதற்கு வரும் குடும்ப அட்டைதாரர்களிடம் நியாய விலை அங்காடி ஊழியர்கள் கனிவாக நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் செயல்திட்டங்களின் முழுப்பயனும், ஏழை, எளிய மக்களுக்குப் போய் சேரவும், அம்மா அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகின்ற உணவுத்துறை சிறப்பாக செயல்படவும் அனைத்து அலுவலர்களும் அயராது பாடுபட வேண்டுமெனவும் உணவு அமைச்சர் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது தமிழக அரசு உணவுத்துறை செயலர் திருமதி எம்.பி. நிர்மலா இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல்துறை ஆணையாளர் திரு. பி.எம்.பஷீர்அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் திரு. எம். சந்திரசேகரன், இ.ஆப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர்
மாண்புமிகுஉணவுத்துறை அமைச்சர் அலுவலகம்
தலைமைச் செயலகம்
சென்னை–9

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.